திரு எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கள்ளச் சினிமா டிக்கெட்டுகள் விற்பனையில் திரையரங்கு நிர்வாகிகளுக்கும், அங்கே பாதுகாப்புக்காகச் செல்லுகின்ற சில காவலர்களுக்கும் ஈடுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ரசிகர் மன்றத்தின் தலைவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இதுபற்றி அரசு அறியுமா? இதன் மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் முழுத் தகவல் இல்லை. ஆனாலும் சில தகவல்களை அவைக்குத் தர விரும்புகிறேன்.

தமிழ் நாடு படக்காட்சி விதி 52-ஏ-யின் கீழ் உரிமம் பெற்றவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஏஜன்ட் இவர்களைத் தவிர வேறு எவரும் படக்காட்சி டிக்கட்டுகள் விற்கவோ, கொடுக்கவோ விற்பனைக்காக வைத்திருப்பதோ கூடாது. படக்காட்சி கொட்டகைகளில் விற்பனை அலுவலகத்தில் மட்டும்தான் விற்கப் பட வேண்டும். மேலும், வரிசையில் நிற்கும் நபர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும்.

பொது நன்மைக்காக காட்டப்படும் காட்சிகளுக்கு விற்பனை அலுவலகத்தைத் தவிர வெளியில் விற்க, உரிமை வழங்கும் அதிகாரம் உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு உண்டு.

இது போதும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் பதில் இல்லை.

தீயணைப்பு நிலையங்கள்.

* வினா 162—திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், பாபநாசத்தில் தீயணைப்புப் படையின் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : இல்லை.

* வினா 163—திரு கே. சுப்பிரவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சீர்காழி நகரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : சீர்காழி உள்பட 52 நகரங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க தீயணைப்புத்துறை இயக்குநரால் அனுப்பப்பட்ட பட்டியல் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

1978 மார்ச் 8]

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : சாதாரணமாக எங்கள் பகுதியில் தீ பிடித்துக்கொண்டால் அதை பொதுமக்கள் அணைத்த பிறகுதான் தீயணைப்புப் படை வருவது வழக்கம். ஆகவே மிக முக்கியமான தாலுக்கா தலைநகராக பாபநாசம் இருப்பதால் அங்கே ஒரு தீயணைப்புப் படை அமைப்பதற்கு இந்த அரசு இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா ?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அரசினர் தமது 19–3–73 ஆம் தேதிய உள்துறை ஆணை 762இல் ஓர் முதன்மைப் பட்டியலை அங்கீகரித்துள்ளனர். இம்முதன்மை பட்டியலானது நகரின் மக்கள் தொகை, தீ அபாயம் உள்ள இடங்கள், அருகாமையிலுள்ள தீ அணைப்பு நிலையத்தின் தொலைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள 59 நகரங்களில் 29 நகரங்களில் ஏற்கெனவே தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 30 நகரங்களோடு மேலும் 22 நகரங்களின் பெயர்களையும் சேர்த்து 52 நகரங்கள் கொண்ட ஒரு புதிய பட்டியலை தயாரித்து அரசினரது ஒப்புதலுக்கு தீயணைப்புத் துறை இயக்குநரால் அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு என். கிட்டப்பா : ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நகரங்கள் தவிர எஞ்சியுள்ள நகரங்களின் பட்டியல் இருப்பதாகத் தெரிவித்தார்கள், அதில் எந்தெந்த ஊர்கள் அடங்கியிருக்கின்றன ? குறிப்பாக, சீர்காழியில் தீயணைப்பு நிலையம் உருவாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அந்தப் பட்டியல் என்னிடம் இல்லை. இப்போது. இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக்கிறேன். சீர்காழி 19ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இதன் முறை வரும்போது ஒரு தீயணைப்பு நிலையம் திறப்பதற்கு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

புயலால் பாதிக்கப்பட்டவர்கள்:

*வினா 441—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;
12-11-1977ல் வீசிய கடும் புயல் காரணமாக மரணமடைந்தோர் குடும்பத்திற்கு அளிக்கப்படும் உதவித் தொகை ரூ. 1000 என்பதை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இல்லை.